ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஏழை ஏதலன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏழை ஏதலன் ॥

திருவரங்கம் - 5

‡ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி⋆ மற்றவற்கின்னருள் சுரந்து⋆
மாழை மான் மட நோக்கி உன் தோழி⋆
உம்பி எம்பி என்றொழிந்திலை⋆ உகந்து
தோழன் நீ எனக்கிங்கொழி என்ற
சொற்கள் வந்து⋆ அடியேன் மனத்திருந்திட⋆
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (1)

வாத மா மகன் மர்க்கடம் விலங்கு⋆
மற்றோர் சாதியென்றொழிந்திலை⋆ உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்⋆
செய்த தகவினுக்கில்லை கைம்மாறென்று⋆
கோதில் வாய்மையினாயொடும் உடனே⋆
உண்பன் நான் என்ற ஒண் பொருள்⋆ எனக்கும்
ஆதல் வேண்டும் என்றடியிணையடைந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (2)

கடி கொள் பூம் பொழில் காமரு பொய்கை⋆
வைகு தாமரை வாங்கிய வேழம்⋆
முடியும் வண்ணம் ஓர் முழு வலி முதலை
பற்ற⋆ மற்றது நின் சரண் நினைப்ப⋆
கொடிய வாய் விலங்கின் உயிர் மலங்கக்⋆
கொண்ட சீற்றம் ஒன்றுண்டுளதறிந்து⋆ உன்
அடியனேனும் வந்தடியிணையடைந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (3)

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்⋆
    வெருவி வந்து நின் சரண் எனச் சரணாய்⋆
நெஞ்சில் கொண்டு நின்னஞ்சிறைப் பறவைக்கு⋆
    அடைக்கலம் கொடுத்தருள் செய்ததறிந்து⋆
வெஞ்சொலாளர்கள் நமன் தமர் கடியர்⋆
    கொடிய செய்வனவுள⋆ அதற்கடியேன்
அஞ்சிவந்து நின் அடியிணை அடைந்தேன்⋆
    அணி பொழில் திருவரங்கத்தம்மானே (4)

மாக மா நிலம் முழுதும் வந்திறைஞ்சும்⋆
    மலர் அடி கண்ட மா மறையாளன்⋆
தோகை மா மயில் அன்னவர் இன்பம்⋆
    துற்றிலாமையில் அத்த! இங்கொழிந்து⋆
போகம் நீ எய்திப் பின்னும் நம் இடைக்கே⋆
    போதுவாய் என்ற பொன் அருள்⋆ எனக்கும்
ஆக வேண்டும் என்றடியிணையடைந்தேன்⋆
    அணி பொழில் திருவரங்கத்தம்மானே (5)

மன்னு நான்மறை மா முனி பெற்ற
    மைந்தனை⋆ மதியாத வெங்கூற்றம்
தன்னை அஞ்சி⋆ நின் சரண் எனச் சரணாய்த்⋆
    தகவில் காலனை உக முனிந்தொழியா⋆
பின்னை என்றும் நின் திருவடி பிரியா
    வண்ணம்⋆ எண்ணிய பேரருள்⋆ எனக்கும்
அன்னதாகும் என்றடியிணையடைந்தேன்⋆
    அணி பொழில் திருவரங்கத்தம்மானே (6)

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்⋆
    உனக்குமுன் தந்த அந்தணன் ஒருவன்⋆
காதல் என் மகன் புகல் இடம் காணேன்⋆
    கண்டு நீ தருவாய் எனக்கென்று⋆
கோதில் வாய்மையினான் உனை வேண்டிய⋆
    குறை முடித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்⋆

ஆதலால் வந்துன் அடியிணை அடைந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (7)

வேத வாய் மொழி அந்தணன் ஒருவன்⋆
எந்தை! நின் சரண் என்னுடை மனைவி⋆
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்⋆
கடியதோர் தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப⋆
ஏதலார் முன்னே இன் அருள் அவர்க்குச்
செய்து⋆ உன் மக்கள் மற்றிவர் என்று கொடுத்தாய்⋆
ஆதலால் வந்துன் அடியிணை அடைந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (8)

துளங்கு நீள் முடி அரசர் தம் குரிசில்⋆
தொண்டை மன்னவன் திண் திறல் ஒருவற்கு⋆
உளங்கொள் அன்பினோடின்னருள் சுரந்து⋆ அங்-
கோடு நாழிகை ஏழ் உடன் இருப்ப⋆
வளம் கொள் மந்திரம் மற்றவற்கருளிச்
செய்தவாறு⋆ அடியேன் அறிந்து⋆ உலகம்
அளந்த பொன் அடியே அடைந்துய்ந்தேன்⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானே (9)

‡மாட மாளிகை சூழ் திருமங்கை
மன்னன்⋆ ஒன்னலர் தங்களை வெல்லும்⋆
ஆடல்மா வலவன் கலிகன்றி⋆
அணி பொழில் திருவரங்கத்தம்மானை⋆
நீடு தொல் புகழ் ஆழி வல்லானை⋆
எந்தையை நெடுமாலை நினைந்த⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட⋆ நும்மிடைப் பாவம் நில்லாவே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖